பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
08 11 2024 6 45
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் தீவிரவாத சம்பவங்கள் 70 சதவீதம் குறைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின சமுதாயத்தினருக்கான அம்பேத்கர் தொழில் முன்னோடித் திட்டத்தை தகுதி உடையோர் அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.
- தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி அருகே 122 ஏக்கரில் சிப்காட் தொழிற்பூங்காவின் முதற்கட்டப் பணி தொடங்கப்பட உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.
- தமிழகத்தில் சென்னை, திருவள்ளூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- தேசிய சீனியர் ஹாக்கி சாம்பியன் போட்டியில் தமிழக அணி 43-0 என்ற கோல் கணக்கில் அந்தமான் நிகோபார் அணியை வென்றது.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் தீவிரவாத சம்பவங்கள் 70 சதவீதம் குறைந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் தேசிய புலனாய்வு முகமையின் தீவிரவாத எதிர்ப்பு மாநாட்டை அவர் தொடங்கி வைத்தார்.

தீவிரவாதம் மற்றும் அவர்களுக்கு ஆதரவளிக்கும் முழு கட்டமைப்மைக்கும் எதிராக தேசிய தீவிரவாத எதிர்ப்புக் கொள்கை மற்றும் திட்டமிடலை உள்துறை அமைச்சகம் விரைவில் அறிமுகப்படுத்தும் என்று அவர் தெரிவித்தார்.

பல்வேறு வகையான தீவிரவாதம், கள்ளநோட்டு மற்றும் போதைப்பொருள் உள்ளிட்ட வழக்குகளில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடும் அமைப்புகள் சட்டவிரோத தடுப்பு நடவடிக்கை சட்டத்தை பயன்படுத்துவதுடன் தேசிய புலனாய்வு முகமையின் உதவியை நாட வேண்டும் என்றும் திரு. அமித் ஷா அறிவுறுத்தினார்.

<<<<>>>>

புதுதில்லியில் இன்று நடைபெற உள்ள மத்திய ஊழல் தடுப்பு கண்காணிப்பு ஆணையத்தின் விழிப்புணர்வு வாரவிழாவில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்க உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் ஊழல் தடுப்பு கண்காணிப்பு ஆணையம் தயாரித்துள்ள 3 கையேடுகளை அவர் வெளியிட உள்ளார்.

ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் குறித்த சிறப்பு அஞ்சல் உறையையும் அவர் வெளியிட உள்ளார்.

இவ்விழாவில் முன்னாள் மத்திய ஊழல் தடுப்பு கண்காணிப்பு ஆணையர்கள், மத்திய அரசு உயரதிகாரிகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை வங்கிகளின் மேலாண்மை இயக்குநர்கள், ஊழல் தடுப்பு உயரதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொள்கின்றனர்.

<<<<>>>>

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தமது ஆஸ்திரேலிய பயணத்தை முடித்துக்கொண்டு இன்று சிங்கப்பூர் செல்கிறார்.

அங்கு அந்நாட்டு அதிபர் திரு. தர்மன் ஷண்முக ரத்னம், பிரதமர் திரு. லாரன்ஸ் வாங், துணைப் பிரதமர் திரு. **Gan Kim Yong** ஆகியோரை சந்தித்துப் பேச உள்ளார்.

அத்துடன் சிங்கப்பூர் பாதுகாப்பு அமைச்சர் திரு. **Ng Eng Hen** மற்றும் வெளியுறவு அமைச்சர் திரு. விவியன் பாலகிருஷ்ணன் ஆகியோரை சந்தித்து விவாதிக்க உள்ளார்.

அப்போது இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து அவர் விவாதிக்க உள்ளார்.

ஆசியான் இந்தியா மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியிலும் திரு. ஜெய்சங்கர் பங்கேற்க உள்ளார்.

<<<<>>>>

மகாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தில் அனைத்துக் கட்சியினரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று நண்பகலில் வடக்கு மகாராஷ்டிரா பகுதியில் உள்ள துலே என்ற இடத்தில் தமது தேர்தல் பிரச்சாரத்தை தொடங்குகிறார்.

சிவசேனா ஷிண்டே பிரிவைச் சேர்ந்த தலைவரும், அம்மாநில முதலமைச்சருமான திரு. ஏக்நாத் ஷிண்டே, தரஷிவ் பகுதியில் வாக்கு சேகரிக்கிறார்.

துணை முதலமைச்சரும், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவருமான திரு. அஜித் பவார் புனே மற்றும் பிம்ரி தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

சரத்பவார் பிரிவைச் சேர்ந்த தேசிவாத காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. சரத்பவார், பார்பனி மற்றும் வார்தா தொகுதிகளில் இன்று வாக்கு சேகரிக்கிறார்.

இதற்கிடையே உத்தவ்தாக்கரே பிரிவைச் சேர்ந்த சிவசேனா மும்பையில் நேற்று தமது கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டது.

<<<<>>>>

விழுப்புரத்தில் இருந்து செகந்தராபாதுக்கு இன்று மாலை மணி 4.05க்கு சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இதேபோல் 15ஆம் தேதியும் இந்த ரயில் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே தாம்பரம் – ஹைதராபாத் சார்மினார் எக்ஸ்பிரஸ் ரயிலில் இரண்டு பொதுப் பெட்டிகளுக்குப் பதிலாக இரண்டு படுக்கை வசதிகள் கொண்ட பெட்டிகள் இணைக்கப்படும் என்று தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஆதி திராவிடர் பழங்குடியின சமுதாயத்தினருக்கான அம்பேத்கர் தொழில் முன்னோடித் திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்கத் தகுதி உடையோர் அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இத்திட்டம் குறித்து நாளிதழ் ஒன்றில் இடம்பெற்றுள்ள செய்தியை சுட்டிக்காட்டி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இத்திட்டத்தின் மூலம் 1988 பேர் பயனடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

453 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும், 230 கோடி ரூபாய் மானியம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜகண்ணப்பன் கூறியுள்ளார்.

கோவை பச்சாபாளையத்தில் உள்ள மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய வளாகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

அப்போது பால் உற்பத்தியாளர்களின் குறைகளையும், கோரிக்கைகளையும் அவர் கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. ராஜகண்ணப்பன், பால் உற்பத்தியாளருக்கு உரிய பணம் வழங்கப்படுவதாகவும், ஆவின் பாலகங்கள் நவீனமயமாக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி அருகே 122 ஏக்கரில் சிப்காட் தொழிற்பூங்காவின் முதற்கட்டப் பணி தொடங்கப்பட உள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இதன் மூலம் 30 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் 14 ஆயிரத்து 525 பயனாளிகளுக்கு 154 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி தொடங்கி வைத்தார்.

43 கோடியே 58 லட்சம் ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற அரசின் திட்டப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு அர்ப்பணித்தார்.

28 கோடி ரூபாய் மதிப்பிலான 2 புதிய பணிகளுக்கும் திரு. உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

<<<<>>>>

தமிழகத்தில் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராமநாதபுரம் ஆகிய கடலோர மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், தென்காசி மற்றும் டெல்டா மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்காவிடம் இருந்து 25 எஃப்-15 ரக போர் விமானங்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

அமெரிக்காவின் புதிய அதிபராக திரு. டொனால்டு ட்ரம்ப் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் தேதி பதவியேற்கும்போது அதிகாரத்தை முறையாக பரிமாற்றம் செய்ய உள்ளதாக தற்போதைய அதிபர் திரு. ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இரண்டாவது இந்திய ராணுவ பாரம்பரிய விழா இன்று புதுதில்லியில் தொடங்குகிறது.

<<<<>>>>

வெளிநாட்டு பரிமாற்ற மேலாண்மை சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் அமேசான், ஃப்ளிப்கார்ட் நிறுவனங்களின் விற்பனையாளர்களுக்குச் சொந்தமான 19 இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

<<<<>>>>

தருமபுரி மாவட்டம் வத்தல்மலையில் சாகச சுற்றுலா மையம் அமைக்கும் பணியை மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 'பெண் குழந்தைகளைக் காப்போம் - பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்' திட்டத்தின்கீழ் பெறப்படும் புகார்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் திருமதி சரயு எச்சரித்துள்ளார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களின் விடுதிகளில் உள்ள வசதிகள் குறித்து ஆட்சியர் திருமதி லட்சுமி பவ்யா தன்னீரு ஆய்வு செய்தார்.

<<<<>>>>

சிதம்பரம் நடராஜர் கோவிலில் கனகசபை மீது நின்று பக்தர்கள் தரிசனம் செய்வதற்கான நேரம் மற்றும் வழிமுறைகள் குறித்த திட்ட விவரங்களை தாக்கல் செய்யும்படி பொது தீட்சிதர்கள் தரப்புக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

<<<<>>>>

திருப்பரங்குன்றம், ராமேஸ்வரம், நெல்லை, பழனி உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள முருகன் கோவிலில் நேற்று சூரசம்ஹாரம் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

<<<<>>>>

விழுப்புரம் மாவட்டம் மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் நடத்திய சோதனையில் கணக்கில் வராத ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தேசிய சீனியர் ஹாக்கி சாம்பியன் போட்டியில் தமிழக அணி 43-0 என்ற கோல் கணக்கில் அந்தமான் நிகோபார் அணியை வென்றது.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியில் கேப்டன் கார்த்தி 13 கோலும், சோமன்னா, சுந்தரபாண்டி ஆகியோர் தலா 9 கோலும், மாரீஸ்வரன் சக்திவேல் 6 கோலும் அடித்தனர்.

ப்ரித்வி 3 கோலும், செல்வராஜ் கனகராஜ் 2 கோலும், ஷியாம் குமார் ஒரு கோலும் அடித்தனர்.

<<<<>>>>

உலக செஸ் தரவரிசையில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி இரண்டாம் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்று வரும் செஸ் கிராண்ட் மாஸ்டர் போட்டியின் 3வது சுற்றில் செர்பியாவின் **Alexey Sarana**-வை வென்றதன் மூலம் அவர் இத்தகுதியைப் பெற்றார்.

உலக செஸ் தரவரிசையில் 2 ஆயிரத்து 805 புள்ளிகளைப் பெற்றதன் மூலம் விஸ்வநாதன் ஆனந்திற்குப் பிறகு 2 ஆயிரத்து 800 புள்ளிகளைக் கடந்த 2வது இந்திய வீரர் என்ற பெருமையை அர்ஜுன் எரிகேசி பெற்றுள்ளார்.

மற்றொரு 3வது சுற்றுப் போட்டியில் இந்திய வீரர்கள் அரவிந்த் சிதம்பரம் - விதித் குஜராத்தி ஆகியோருக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

<<<<>>>>

இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதலாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

டர்பனில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு மணி 8.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>